RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 279 | அக்டோபர்.10 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## திமுக அரசால் விஜய்க்கு மட்டுமல்ல தமிழக மக்களுக்கும் ஆபத்து: நயினார் நாகேந்திரன்



திருநெல்வேலி: அக்.10-

திமுக அரசால் விஜய்க்கு மட்டுமின்றி தமிழக மக்களுக்கும் ஆபத்து இருக்கிறது என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகால திமுக ஆட்சிக்கு எதிரான மனநிலை பொதுமக்களிடம் இருக்கிறது. அவர்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும். தமிழக மக்கள் ஒன்று சேர்ந்து ஆட்சி மாற்றத்தை கொண்டு வரப் போகிறார்கள். ஒரு குடையின் கீழ் பல கொடிகள் வர வேண்டும் என்பது எனது ஆசை.

யார் பாதிக்கப்பட்டார்களோ அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்வதையே திமுக அரசு வழக்கமாக வைத்துள்ளது. திமுக ஆட்சியில் 283 போக்சோ வழக்குகள் பதிவாகியுள்ளன. பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் 55% அதிகமாகியுள்ளது. தேர்தல் ஆணையம் சுதந்திரமான அமைப்பு. 5 ஆண்டுகள் முடிந்தால் தேர்தலை நடத்த தேதியை நிர்ணயம் செய்வது தான் வழக்கம். தேர்தல் தேதிக்கு பிரதமர் பஞ்சாங்கமா பார்க்க முடியும்.

கரூருக்கு தவெக தலைவர் விஜய் சென்று இருந்தால் அவர் உயிருக்கு யார் உத்திரவாதம் கொடுப்பது. இதனால்தான் அரசிடம் பாதுகாப்பு கேட்டுள்ளனர். டிடிவி தினகரனும் செந்தில்பாலாஜியும் கரூர் விவகாரம் தொடர்பாக போனில் பேசி இருக்கிறார்களா என்பது எனக்கு தெரியாது. அவர்கள் இருவரும் போனில் பேசி அரசை குறை சொல்ல வேண்டாம் என சொல்லி இருக்கிறார்களா என்பதும் தெரியாது.

முன்னாள் முதல்வர் எம்ஜிஆர், உலகத்தில் உள்ள அனைவருக்கும் பொதுவான தலைவர். அவரது சிலையவே சேதப்படுத்துகிறார்கள் என்றால் இந்த ஆட்சி மிகமோசமான ஆட்சியாக உள்ளதை தெரிந்து கொள்ளலா.ம்

விஜய் சென்ற இடத்தில் ஏற்கெனவே கூட்டம் வந்துதான் தள்ளுமுள்ளு உருவானது. அவர் அங்கேயே இருந்திருந்தால் அவரை அடித்து கொன்றிருப்பார்கள். இப்போது மீண்டும் விஜய் அங்கு சென்றால் கூட்டம் வரத்தான் செய்யும், தள்ளுமுள்ளு ஏற்படத்தான் செய்யும். அந்த சாக்குப்போக்கில் விஜய்யையும் சேர்த்து காலி செய்து விட்டால் என்ன செய்வது. மக்களை பாதுகாக்க வேண்டியது அரசின் பொறுப்பு. அதை திமுக அரசு செய்யத் தவறிவிட்டது. கரூர் சம்பவத்துக்கு 100க்கு 200 சதவீதம் திமுக அரசுதான் பொறுப்பு. திமுக அரசால் விஜய்க்கு மட்டுமல்ல பொது மக்களுக்குமே ஆபத்து இருக்கிறது.

வரும் 12ம் தேதி திட்டமிட்டபடி எனது சுற்றுப்பயணம் நடைபெறுகிறது. பிஹார் தேர்தல் பணிகளில் பாஜக அகில இந்திய தலைவர் ஜே.பி நட்டா ஈடுபட்டுள்ளதால் சுற்றுப்பயணம் தொடக்க விழாவில் அவர் கலந்து கொள்ளவில்லை. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கரூர் விவகாரத்தை தொடர்ந்து சுற்றுப்பயணத்துக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. அரசும் காவல் துறையும் கொடுக்கும் அனுமதியின்படி சுற்றுப்பயணம் நடைபெறும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அப்போது அவருடன், திருநெல்வேலி மாவட்ட பாஜக மூத்த நிர்வாகி டி.வி. சுரேஷ், ஓபிசி அணி மாவட்ட தலைவர் ராஜா மணிகண்டன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



## சொத்துவரி முறைகேடு வழக்கு: மதுரை மேயர் கணவருக்கு ஐகோர்ட் நிபந்தனை ஜாமீன்

மதுரை: அக்.10-

சொத்துவரி முறைகேடு வழக்கில் மதுரை மாநகராட்சி மேயரின் கணவருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மதுரை மாநகராட்சி மேயரின் கணவர் பொன்வசந்த் உயர் நீதிமன்றம் மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: மதுரை மாநகராட்சியில் சொத்து வரி முறைகேடு தொடர்பான வழக்கில், ஆகஸ்ட் 12ம் தேதி கைது செய்யப்பட்டு, தற்போது வரை நீதிமன்ற காவலில் உள்ளேன்.

நான் நிரபராதி, எந்த குற்றத்தையும் செய்யவில்லை. முன்விரோதம் காரணமாகவே எனது பெயர் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. எனது உடல் நிலை மோசமாக உள்ளது. ஆகவே நிபந்தனைகளுடன் ஜாமீன் வழங்க வேண்டும் என கூறி இருந்தார்.

இந்த மனு நீதிபதி ஸ்ரீமதி முன் இன்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், "மனுதாரர் இந்த வழக்கில் வேண்டுமென்றே சிக்க வைக்கப்பட்டுள்ளார். உடல்நல குறைபாட்டால் அவசர சிகிச்சை பெற்று வருகிறார். விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவார். இந்த வழக்கில் தொடர்புடைய பலர் ஜாமீனில் உள்ளனர். இவருக்கு மட்டும் ஜாமீன் வழங்காமல் இருப்பது ஏற்புடையதல்ல" எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசுத் தரப்பில், ஜாமீன் வழங்கினால் சாட்சிகளை கலைக்க வாய்ப்பு உள்ளது. ஆகவே ஜாமீன் வழங்கக் கூடாது என்று கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, வழக்கில் தொடர்புடைய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டு விட்டன. மனுதாரர் சிறையில் இருக்கும் காலத்தை கருத்தில் கொண்டு மதுரை நகர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் 4 வாரங்களுக்கு தினமும் நேரில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.

## கோவையில் 5 தளங்களுடன் கூடிய பிரம்மாண்ட 'தங்கநகை பூங்கா'!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!





கோயம்புத்தூர், அக்.10-

குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் முதற்கட்டமாக ரூ.81.40 கோடி மதிப்பீட்டில் 5 தளங்களுடன் அமைக்கப்படவுள்ள தங்கநகை பூங்கா திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் சார்பில் கோயம்புத்தூர், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் 126.12 கோடி ரூபாய் மொத்த திட்ட மதிப்பீட்டில், முதற்கட்டமாக 81.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து தளங்களுடன் அமைக்கப்படவுள்ள தங்கநகை பூங்கா திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

கடந்த 5.11.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூரில் பொற்கொல்லர்களின் பட்டறையினை நேரடியாக ஆய்வு செய்த போது, தங்க நகை உற்பத்தியாளர்கள் மற்றும் அனைத்து தொழிலாளர் நல சங்கம்.

கோயம்புத்தூர் பொற்கொல்லர் சங்கம், கோவை மாவட்ட தங்கநகை கூலி தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அனைத்து வசதிகளுடன் கூடிய தங்க நகை பூங்கா அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அவர்களது கோரிக்கையை நிறைவேற்றிடும் பொருட்டு, மாநிலத்திலேயே தங்க நகைத் தொழிலில் சிறந்து விளங்கும் கோயம்புத்தூர் மாவட்ட தங்க நகைத் தயாரிப்பு தொழில் முனைவோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முதலமைச்சர் அவர்கள் 6.11.2024 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டடம் அடிக்கல் நாட்டு விழாவில், உலக அளவில் தங்க நகைகள் தயாரிப்பில் முக்கிய மையமாக விளங்கும் கோவைக்கு, குறிச்சியில் உள்ள தொழிற்பேட்டையில், 126 கோடி ரூபாய் செலவில், தொழில் வளாகம் கட்டப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், முதற்கட்டமாக ரூ.81.40 கோடி மதிப்பீட்டில் ஐந்து தளங்களுடன் அமைக்கப்படவுள்ள தங்க நகை பூங்கா திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அடிக்கல் நாட்டினார்.

இந்த தங்க நகை பூங்கா திட்டத்தில், பொற்கொல்லர்களுக்கு பணியிட வசதி வழங்கும் நோக்கில் 100 சதுர அடி முதல் 300 சதுர அடி வரையிலான பரப்பளவு கொண்ட பட்டறைகள் மற்றும் தங்க நகை உற்பத்தி சார்ந்த நவீன இயந்திரங்களை உள்ளடக்கிய பொது வசதி மையம், தங்க பாதுகாப்பு பெட்டகம்;

ஹால்மார்க் தர பரிசோதனைக் கூடம், தங்க நகை கண்காட்சி கூடம், கூட்டரங்கம், 3டி பிரிண்டிங் மற்றும் லேசர் கட்டிங் & CAD / CAM வசதிகள், பயிற்சி மையம், குழந்தைகள் காப்பகம், கண்காணிப்பு கேமரா வசதிகள் (CCTV), தீயணைப்பு வசதிகள் போன்றவை அமைக்கப்படவுள்ளது.

கோயம்புத்தூரில் தங்கநகை பூங்கா அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பொற்கொல்லர் சங்கங்களின் நிர்வாகிகள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

## என்றும் 'கை' நம்மைவிட்டு போகாது: வேடசந்தூரில் உதயநிதி ஸ்டாலின் பேச்சு



வேடசந்தூர்: அக்.10-

என்றும் 'கை' நம்மோடு தான் இருக்கும், நம்மைவிட்டு கை என்றும் போகாது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் சாமிநாதன் இல்ல திருமண விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் கலந்துகொண்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது: "இந்த விழா மேடைக்கு நான் முழுமையாக வருவேனா என்றே சந்தேகம் இருந்தது. உங்களின் அன்பை பார்த்து. எனது கையோடு முழுதாக வருவேனா என்ற சந்தேகம் இருந்தது. அந்த அளவுக்கு தொண்டர்கள் உற்சாக மிகுதியில் எனக்கு கை கொடுத்து வரவேற்றனர்.

என்றும் 'கை' நம்மைவிட்டு போகாது. என்றும் நம்முடன் தான் இருக்கும். நான் எனது கையை சொன்னேன். நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை சொன்னேன். இங்கு மக்கள் மிகவும் மகிழ்ச்சியோடும் எழுச்சியோடும் உற்சாகத்துடன் வந்து இருக்கிறீர்கள். வாக்காளர் பட்டியலில் பெண்களின் எண்ணிக்கையை அதிகமாக இருக்கும். அதேபோல் இந்த விழாவிலும் பெண்கள் அதிக அளவில் பங்கேற்றி இருக்கிறீர்கள்.

நமது திமுக அரசு, பெண்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, பெண்களின் அரசாக செயல்படுகிறது. அதுவே பெண்கள் மகிழ்ச்சியாகவும் அதிகளவிலும் வந்திருப்பதற்கும் காரணமாகும். மகளிர் உரிமைத் திட்டத்தில் ஒரு கோடியே 20 லட்சம் பேருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்க ப்பட்டு வருகிறது. தொடர்ந்து 25வது மாதமாக உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் விண்ணப்பித்தும் உதவித்தொகை தரவில்லை என்று சிலர் கூறுகிறார்கள். அவர்களுக்கும் இன்னும் இரண்டு மாதத்தில் வழங்கப்படும். இந்தியாவில் முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. அதிக பொருளாதார வளர்ச்சி அடைந்த மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. இதைப் பார்த்து தான் சங்கிகளுக்கும், பாசிஸ்ட்களுக்கும் வயிற்று எரிச்சல். எப்படியாவது தமிழகத்திற்கு தொல்லை கொடுக்க வேண்டும். தமிழகத்தை அபகரிக்க வேண்டும் என திட்டம் தீட்டி வருகின்றனர்.

இதை பொறுக்க முடியாமல் பாசிசவாதிகள் சங்கிகள் வயிற்று எரிச்சல் கொள்கிறார்கள். தமிழ்நாட்டை அபகரிக்க திட்டம் போடுகிறார்கள். மத்திய அரசுக்கு எடப்பாடி பழனிச்சாமி என்ற அடிமை சிக்கியுள்ளார். இந்த அடி பத்தவில்லை என புது அடிமைகளை தேடி வருகின்றனர். எத்தனை அடிமைகள் ஒன்றாக சேர்ந்து வந்தாலும் தமிழகத்தை அபகரிக்க திட்டம் போட்டாலும், பாசிச பாஜக தமிழகத்தில் காலடி எடுத்தவைக்க முடியாது. ஒவ்வொரு திமுக தொண்டனும் அதை ஓட ஓட விரட்டுவான்.

எடப்பாடி பழனிச்சாமி ஒரு பஸ்சை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டார். அவருக்கு ஜெயலலிதா முகம் மட்டுமின்றி, எம்ஜிஆரின் முகமும் மறந்து விட்டது. நீலகிரியில் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு அண்ணா என்று கூறுகிறார். கீழே இருந்து தொண்டர் நினைவு படுத்துகிறார். அந்த அளவுக்கு யாரைப் பார்த்தாலும் பழனிசாமிக்கு அமித்ஷாவின் முகமாகத்தான் தெரிகிறது.

நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலில் 200 தொகுதிகளில் திமுக அணி வெற்றி பெற வேண்டும் என்று முதல்வர் இலக்கு நிர்ணயித்திருக்கிறார். அந்த இலக்கை அடைய வேண்டும். அதில் முதல் தொகுதியாக வேடசந்தூர் இருக்கும். திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து அந்த வெற்றி தொடங்க வேண்டும்" என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் எம்எல்ஏ.,க்கள் காந்தி ராஜன், செந்தில்குமார், கரூர் எம்.பி., காங்கிரஸ் எம்.பி ஜோதிமணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.




# அனைத்து வட்டார ஐக்கிய ஜமாத் மற்றும் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக, மாபெரும் பேரணி மற்றும் பொதுக்கூட்டம்

செங்கல்பட்டு, அக்.10-

செங்கல்பட்டு மாவட்டம் செம்பாக்கத்தில் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும் பயங்கரவாத அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை கண்டித்தும், அனைத்து வட்டார ஐக்கிய ஜமாத் மற்றும் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக, மாபெரும் பேரணி மற்றும் பொதுக்கூட்டம், தாம்பரம் ஜும்மா பள்ளிவாசல் தலைவர், நாகூர் கனி, மஸ்ஜிதே ஸலாமுத் பள்ளி செயலாளர், முகமது இக்பால்,நூருல் இஸ்லாம் பள்ளி தலைவர் செய்யது அஹமது ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதில் மனிதநேய மக்கள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் தாம்பரம் எம்.யாக்கூப், தலைமை நிலைய செயலாளர் வழ,எம்.ஜைனுல் ஆபுதீன், மாநில அமைப்பு செயலாளர் வழ, புழல் ஷேக் முஹமது அலி, தலைமை பிரதிநிதி அச்சரப்பாக்கம், ஷாஜகான் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர் செந்தில் வேல்,விசிக துணைப்பொதுச் செயலாளர் வன்னி அரசு உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

மேலும் இந்நிகழ்வில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே.ஜாஹிர் உசேன், செம்பாக்கம் மஸ்ஜிதே அன்வரி பள்ளிவாசல் தலைவர் முஹம்மது யூசுப், மாநில இளைஞர் அணி செயலாளர் தமீம் அன்சாரி, மனிதநேய தொழிற்சங்க மாநில செயலாளர் சாதிக் பாஷா, அணி மாநில பொருளாளர் ஆஷிக் ஹமீது உள்ளிட்ட மாநில மாவட்ட நிர்வாகிகளும், ஜமாத்தார் தோழமை கட்சியினர் பொது மக்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்




# காரைக்குடியில் ஊடகவியலாளர்களுக்கான பயிலரங்கம் நடைபெற்றது

காரைக்குடி, அக்.10-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் இந்திய அரசின், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பத்திரிகை தகவல் அலுவலகம் சார்பாக ஊடகவியலாளர்களுக்கான பயிலரங்கம் காரைக்குடியிலுள்ள சிஎஸ்ஐஆர் மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனதில் நேற்று நடைபெற்றது.



இந்த நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக கலந்துகொண்டு பேசிய பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென்மண்டல தலைமை இயக்குநர் வி பழனிசாமி சமூக பொருளாதார வளர்ச்சி தொடர்பான செய்திகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என ஊடகவியலாளர்களைக் கேட்டுக்கொண்டார். மேலும் அவர், டிஜிட்டல் யுகமான தற்காலத்திற்கு தேவையான திறன்களை வளர்த்துக்கொள்வது மிகவும் அவசியம் என்று தெரிவித்தார்.

இறுதியாக போலிச் செய்திகளை தடுப்பது இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாத பணி என்றும் அவர் தெரிவித்தார். தேசிய திறந்தநிலை கல்வி நிறுவனத்தின் மண்டல் இயக்குனர் வி சந்தானம் பள்ளிக் கல்வி இடைநிற்றலைக் குறைக்கும் வகையில் தேசிய திறந்த நிலை கல்வி நிறுவனம் எவ்வாறு பல்வேறு பாடங்களை தேர்வு செய்து எளிதில் 8ம் வகுப்பு, 10 ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு தேர்ச்சி பெறலாம் என்றும், அதன் பிறகு கல்லூரிகளில் சேர்ந்து பட்டப்படிப்புகளை படிக்கலாம் என்றும் விளக்கினார்.

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு தேர்வு மையங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ள தேர்வெழுதும் வசதிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

அண்மையில் நடைமுறைக்கு வந்துள்ள, ஜிஎஸ்டி 2.0 அடுத்த தலைமுறை சீர்திருத்தங்கள் குறித்து மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வரி ஆணையகத்தின் துணை ஆணையர் கே. ஷாலினி சுஷ்மிதா எடுத்துரைத்தார். பொதுமக்களுக்கு அன்றாட வீட்டு உபயோக பொருட்களின் விலை குறைப்பால் எவ்வாறு நன்மை உண்டாகும் என்றும், அதன்மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வாறு வித்திடும் என்றும் விரிவாக எடுத்துரைத்தார்.

சிஎஸ்ஐஆர் மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி முனைவர். டி. ஜோனஸ் டேவிட்சன் , இந்நிறுவனத்தின் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை பட்டியலிட்டதுடன், தற்போது இந்நிறுவனம் மேற்கொண்டுவரும் ஆராய்ச்சிகளை விளக்கியதுடன் அது எவ்வாறு நமக்கு அன்றாட வாழ்வில் உதவும் என்றும் எடுத்துரைத்தார். 17 அம்ச நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்தும் அவற்றில் குறிப்பிட்ட சில இலக்குகளுக்கு மத்திய மின் வேதியியல் எவ்வாறு பங்களிக்கிறது என்றும் விரிவாக எடுத்துரைத்தார். தென்மண்டல தலைமை இயக்குநர் பழனிச்சாமி சிவகங்கை மாவட்ட பத்திரிகையாளர் நலசங்கம் உறுப்பினர்கள்(மாலை தந்தி நாளிதழின் ஆசிரியர்) தலைவர் ஆ.பொன்ராஜ், செயலாளர் ஆ.ரவி பாண்டியன் , பொருளாளர் மா.முத்துராஜா, மாலை தந்தி நாளிதழின் இணை ஆசிரியர்)

துணைச்செயலாளர் கரு.சந்துரு , ஆகியோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



# பகுஜன் சமாஜ் கட்சியின் நிறுவனர் கன்ஸ்ராம் ஜி அவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி தலைவர் அலாவுதீன் தலைமையில் நடைபெற்றது

திருப்பூர், அக்.10-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் அண்ணா சிலை அருகில் பகஜன் ஜமாத் கட்சியின் நிறுவனர் கன்ஸ்ராம் ஜி அவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் விழா நடைபெற்றது இந்த விழாவில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை அளித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது

இந்த நிகழ்ச்சியில்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் அலாவுதீன் மாவட்ட பொதுச் செயலாளர் மணிகண்ட பிரபு தொகுதி செயலாளர் சையது தொழிற்சங்கர் செயலாளர் வேலு

தமிழ் புலிகள் கட்சி சார்பாக வீர வினோத்குமார் அவர்கள் மற்றும் கட்சித் தோழர்கள் கலந்து கொண்டனர்

# சிவகங்கை மாவட்ட காவல்துறை அறிவுறுத்தல்

சிவகங்கை, அக்.10-

தமிழ்நாடு அரசு இயற்றியுள்ள தமிழ்நாடு மருத்துவ சேவை செய்யும் நபர்கள் மற்றும் மருத்துவ சேவை நிறுவனங்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் சொத்து சேதத்தைத் தடுக்கும் சட்டம் 2008 ன் படி மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ மாணவர்கள், மருத்துவமனை ஊழியர்கள் மீது உடல் ரீதியாகவோ, வாய் தகராறில் ஈடுபட்டாலோ, மிரட்டல் விடுத்தாலோ, பணி செய்யவிடாமல் இடையூறு செய்தாலோ மற்றும் மருத்துவமனை கட்டிடங்கள், கருவிகள், வாகனங்கள் அல்லது நோயாளிகளின் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் ஆகியவற்றை உடைத்தல், தீ வைப்பது போன்ற செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து உடனடியாக கைது செய்து நீதிமன்றகாவலுக்கு உட்படுத்தப்படுவர். மேலும், குற்றம் நிரூபிக்கப்பட்டால் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் மேலும் 10 ஆண்டுகள் வரை நீட்டிக்க கூடிய சிறைத்தண்டனை, ரூ.50,000 வரை அபராதம், அல்லது இரண்டுமே விதிக்கப்படும்.

மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் அமைதியைக் காக்கவும், மருத்துவப் பணியாளர்கள் தங்கள் கடமையை பாதுகாப்பாக நிறைவேற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என சிவகங்கை மாவட்ட காவல் துறை சார்பாக அறிவுறுத்தப்படுகிறது.




■ சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் இருவரின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்று மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்களுக்கு தினசரி மதிய உணவு திட்டத்தை தொடங்கினர் இந்நிகழ்வில் நகர்மன்ற தலைவர் துரை ஆனந்த், ராஜா அமுதன், முத்து கண்ணன், சண்முகராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு துவங்கி வைத்தனர் இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட முதியவர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மதிய உணவினை பெற்று மனமகிழ்ந்தனர்.



■ திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் துவரிமான் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமை மதுரை மேற்கு வட்டாட்சியர் முத்துப்பாண்டி குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.முகாமில் துவரிமான் ஊராட்சியை சேர்ந்த பொதுமக்கள் ஏராளமானோர் கோரிக்கைகளை மனுக்களாக அளித்தனர். இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில் மணி அழகு பாண்டி மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயன் ஊராட்சி செயலாளர்கள் ராஜேந்திரன் விஜயபாஸ்கர் கண்ணன் ராஜா உட்பட அனைத்து துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்



# தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 547கிலோபுகையிலை பறிமுதல்

சென்னை, அக்.10-

தாம்பரம் காவல் சரகத்திற்கு உட்பட்ட பீர்க்கன்காரணை காவல் நிலைய மதனபுரம் சோதனை சாவடியில் மகேந்திரா XUV500-TN-09-BQ-6556 கிரே கலர் சோதனை செய்தபோது தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை சாக்கு மூட்டையில் சுமார் 547 கிலோ மொத்தமாகவும் சில்லறை விற்பனைக்காகவும் கொண்டு செல்லப்பட்ட ராஜஸ்தானை சேர்ந்து மனோகர்லால், சுரேஷ் குமார் பிடித்து புகையிலை வைத்திருந்த குற்றத்திற்காகபுகை யிலை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்குபின் புழல் சிறையில் அடைக்கப்பட உள்ளனர்.

# அம்பத்தூரில் பிரமண்டமாக அமைக்கப்பட்டுள்ள ஆலடிப்பட்டியான் கருப்பட்டி காபி கடை மற்றும் பாரம்பரிய உணவகத்தின் 64வது கிளை திறப்பு விழா

## திறப்பு விழா சலுகையாக 50 சதவீத தள்ளுப்படியில் ஸ்விட் மற்றும் காரம் வழங்கப்படுகிறது

சென்னை, அக்10-

சென்னை அடுத்த அம்பத்தூர் எம்.டி.எச் சாலையில் ஆலடிப்பட்டியான் கருப்பட்டி காபி மற்றும் உணவகத்தின் 64 வது கிளை திறப்பு விழா இன்று காலை நடைபெற்றது. ஆலடிப்பட்டியான் பாரம்பரிய கருப்பட்டி காபி மற்றும் சைவ உணவகத்தை அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் சாமுவேல், மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, சென்னை மாநகராட்சி பொது சுகாதரம் நிலை குழு உறுப்பினர் டாக்டர் சாந்தகுமாரி ஆகியோர் ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்தனர்.




ஆலடிப்பட்டியான் உரிமையாளர்களின் ஒருவரான மாரிராஜாவின் பெற்றோர்கள் குத்து விளக்கு ஏற்றி வைத்தனர்.

தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் இனிப்புகளை வாடிக்கையாளர்களுக்கு சிறந்த முறையில் வழங்கி வருவதால் பொது மக்களிடம் ஆலடிப் பட்டியான் அல்வாகடை மற்றும் கருப்பட்டி காபி, பாரம்பரிய உணவகம் ஆகியவை வரவேற்பை பெற்றுள்ளதால் தொடர்சியாக சென்னை மற்றும் சுற்றுபுறங்களில் பல்வேறு கிளைகள் திறக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று புதிய கிளை

கிளை அம்பத்தூரில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த கிளையில் வாகனங்களை நிறுத்தும் வசதி மற்றும் கழிவறை வசதிகள் வாடிக்கையாளருக்கு செய்யப்பட்டுள்ளது.

மேலும் புதிய கடை திறப்பு விழாவை முன்னிட்டு முதலில் வந்த 100 பேருக்கு பாரம்பரிய காலை சிற்றுண்டி, கருப்படிடீ மற்றும் காபி இலவசமாக வழங்கப்பட்டன. மேலும் திறப்பு சலுகையா ஸ்விட் மற்றும் காரம் 50 சதவீத தள்ளுப்படியில் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த உணவகத்தில் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் பயனுள்ள சிறுதானிய உணவுகள் தரமாகவும், சுவையாகவும் கிடைப்பதாக வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் ஆலடிப்பட் டியான் உரிமையாளர்கள் மோசஸ், மாரிராஜா, தேமுதிக மாவட்ட செயலாளர் எம்.சி.பழனி, பகுதி செயலாளர் மதன்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# குரோம்பேட்டையில் வாக்கு திருட்டை தடுப்போம் ஜனநாயகத்தை பாதுகாப்போம் தமிழக காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

குரோம்பேட்டை, அக்.10-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் ம.நரேஷ் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட கமிட்டி தலைவர் பல்லாவரம் ஆர்.எஸ்.செந்தில்குமார் கலந்துகொண்டு கோஷங்களை எழுப்பினார்

மேலும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் 10 குற்றச்சாட்டுகள் என்ன?

.தேர்தல் அட்டவணையில் முறைகேடு, பெரிய அளவிலான வாக்கு திருட்டு, .தேர்தல் ஆதாரங்களை வழங்காமல் தவிர்ப்பது மற்றும் ஆவணங்களை அழிப்பது தொடர்பான குற்றச்சாட்டு, ,போலி வாக்காளர்கள், போலி முகவரிகள், செல்லாத புகைப்படங்கள், வாக்குத்திருட்டு மூலம் நாடாளுமன்ற தேர்தலை பாஜக வென்றதாக குற்றச்சாட்டு,

என்று எல்லாவற்றையும் பட்டியலிட்டு கோஷங்களை எழுப்பினர் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணை தலைவர் பிரபு, சுஹைல், பல்லாவரம் தொகுதி தலைவர் ஜோ.எட்வர்ட், தாம்பரம் தொகுதி தலைவர் ஹைதர் அலி, மாவட்ட பொதுசெயலாளர் விஜய் சங்கர், ஆரித் கான், ஆசிப் அஹ்மத் மாவட்ட செயலாளர் கிஷோர், மண்டல தலைவர்கள்

அஷ்விந்த், பாலாஜி, காளிதாஸ், நந்தகுமார், தினேஷ், லோகேஷ் மற்றும் சாந்தனு, லோகேஷ் , சர்ஃப்ராஸ் இதில் இளைஞர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு கோஷங்களை எழுப்பினர்.

5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் பயன்பெறும் வகையில், வருகின்ற 12.10.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று

# மாவட்டத்தில் 1,270 மையங்களில் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, அக்.10-

சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 99,979 குழந்தைகளுக்கு, வருகின்ற 12.10.2025 அன்று 1,197 நிரந்தர மையங்களிலும் (அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர் நல மையங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிக்கூடங்கள்), 54 நடமாடும் மையங்களிலும், பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள் மற்றும் சுங்கச் சாவடிகள் போன்ற 19 இடைநிலை மையங்களிலும் என மொத்தம் 1,270 மையங்களிலும் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் மூலம் 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், இப்பணிக்கு முன்னேற்பாடாக போலியோ சொட்டு மருந்தின் குளிர்பதன நிலையை பாதுகாக்க தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், மருந்து பெட்டிகளை சொட்டு மருந்து வழங்கும் மையங்களுக்கு கொண்டு செல்ல துறை சார்ந்த வாகனங்களை ஒதுக்கிடவும், சொட்டு மருந்து மையத்திற்கு தேவையான இடவசதி மற்றும் சுகாதாரம், தூய்மை பணிகளை மேற்கொள்ளவும் துறை சார்ந்த அலுவலர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இம்முகாம்களில் பொது சுகாதாரத்துறை, சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி சேவைகள் துறை, ஊரக வளர்ச்சி துறை, நகராட்சி துறை, கல்வி த்துறை மற்றும் பிற துறைகளை சார்ந்த மொத்தம் 5,092 பணியாளர்கள் பணியாற்றவுள்ளனர்.

எனவே, பொதுமக்கள் தங்களின் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்கனவே சொட்டு மருந்து கொடுத்திருந்தாலும், மீண்டும் போலியோ சொட்டுமருந்து கொடுத்து போலியோ நோயை முற்றிலும் அகற்றுவதற்கு உறுதுணையாக இருத்திடல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமானது,

# வருகின்ற 11.10.2025 அன்று காளையார்கோவில் வட்டத்திற்குட்பட்ட மறவமங்கலம், அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, அக்.10-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2.8.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் புதிய திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் வாயிலாக தமிழகம் முழுவதும் சுமார் 1,256 உயர்தர மருத்துவ மையங்கள் மூலம் 17 சிறப்பு மருத்துவ துறைகள் வாயிலாக கட்டணமில்லா மருத்துவ சேவைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில், வாரத்திற்கு ஒரு முகாம் வீதம் மொத்தம் 39 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வருகின்ற 11.10.2025 ஆம் தேதியன்று காளையார் கோவில் வட்டத்திற்குட்பட்ட மறவமங்கலம், அரசு மேல்நிலைப்பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமானது நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில், ரூபாய் 3 ஆயிரம் மதிப்பீட்டிலான இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் அனைத்தும், பொதுமக்களுக்கு இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், பல் மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், மனநல மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், நுரையீரல் நோய் மருத்துவம், பொது மருத்துவம், இருதய மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், தோல் மருத்துவம், சித்த மருத்துவம், இயன்முறை மருத்துவம், அறுவை சிகிச்சை மருத்துவம், மகப்பேறு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுனர்களை கொண்டு, சிறப்பான மருத்துவ சேவைகளும் இம்முகாமின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுவர்களுக்கு எக்கோ பரிசோதனை (Echocardiogram), எக்ஸ்ரே (X-Ray), அலட்ராசவுண்ட ஸ்கேன் (USG), பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் இம்முகாம்களிலேயே மேற்கொள் வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தாய் சேய் நல ஊட்டச்சத்து பெட்டகங்களும் வழங்கப்படவுள்ளது. அதுமட்டுமன்றி, இம்முகாம்களின் வாயிலாக, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்களும் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, முகாமிற்கு வருகைபுரியும் பொதுமக்கள் தங்களின் ஆதார் அட்டையின் நகலினை கொண்டு வருதல் அவசியமாகும். மேலும், இம்முகாமில் காப்பீடு அட்டை வேண்டி விண்ணப்பிப்பவர்கள், குடும்ப அட்டை (Smart Card), ஆதார் அட்டை மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் தங்களது ஆண்டு வருமானம் ரூபாய் 1.20 இலட்சத்துக்கு குறைவாக உள்ளதற்கான சான்று ஆகியவைகளை கொண்டு வருதல் வேண்டும்.

இதுபோன்று, உயிர் காக்கும் தரமான மருத்துவ சேவையினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டமானது, செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதனை பொதுமக்கள் கருத்தில் கொண்டு, தங்களது பகுதிகளில் நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை பயன்படுத்திக் கொண்டு, தங்களது உடல்நலத்தினை முறையாக பேணிக்காத்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையின முஸ்லிம் மாணவ / மாணவியர்கள் வெளிநாட்டில் முதுகலைப் படிப்பு பயில்வதற்கு வழங்கப்படும்

# கல்வி உதவித்தொகையினை பெறுவதற்கு, தகுதியுடைய மாணாக்கர்கள் வருகின்ற 31.10.2025 ஆம் தேதிக்குள் விண்ணப்பித்திடல் வேண்டும்

சிவகங்கை, அக்.10-

2025-2026 ஆம் ஆண்டு, முஸ்லீம் சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு உயர்தர உலகளாவிய கல்வி வாய்ப்புகளை வழங்கிட ஏதுவாக வெளிநாடு சென்று படிக்கும் 10 முஸ்லீம் மாணவர்களுக்கு ஒரு மாணவருக்கு தலா ரூ.36 இலட்சம் வீதம் கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு, ரூ.3.60 கோடி நிதி தமிழ்நாடு அரசின் சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக்கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு விண்ணப்பிக்கும் மாணவ / மாணவிகள், 2025-2026 ஆம் கல்வியாண்டில் முதுகலை பட்டப்படிப்பு படிக்க உலகளாவிய QS (குவாக்கரெல்லி சைமண்டஸ்) தரவரிசையில் முதல் 250 இடங்களுக்குள் உள்ள பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்களிடமிருந்து நிபந்தனையற்ற சேர்க்கை கடிதம் பெற்றிருத்தல் வேண்டும். மேலும், பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.8.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். பட்டப்படிப்பில் 60% அல்லது அதற்கு இணையாக தேர்ச்சி சதவீதம் பெற்றிருத்தல் வேண்டும். பொறியியல், மேலாண்மை, அறிவியல் பயன்பாட்டு அறிவியல், வேளாண்மை அறிவியல், மருத்துவம், சர்வதேச வணிகம், பொருளாதாரம், நிதி கணக்கியல், மனித நேய படிப்புகள், சமூக அறிவியல், நுண்கலைகள் மற்றும் சட்டம் போன்ற பாடப்பிரிவுகளை தேர்ந்தெடுத்து, முதுகலைப் பட்டப்படிப்புக்கான சேர்க்கை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

எனவே, தகுதியுடைய முஸ்லிம் மாணவ / மாணவியர்கள் www.bcmbcmw.tn.gov.in/welfschemes_minorities.htm என்ற இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை 600 005 என்ற முகவரிக்கு வருகின்ற 31.10.2025 ஆம் தேதிக்குள் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பி வைத்திடல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ்

# மாதந்தோறும் ரேசன் பொருட்களை வீடு தேடி வழங்கிவரும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசுக்கு மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தோர் நன்றி தெரிவித்துள்ளனர்





தமிழ்நாட்டில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே நேரடியாக சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர்" என்ற சிறப்பான திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்துள்ளார்கள்.

வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் குடிமைப் பொருட்களை பெற்று எடுத்துச் செல்வதில் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர் என்பதை அறிந்து அவர்களின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்களை வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் 1389 நியாய விலை கடைகள் இருக்கிறது. இதில் 70,311 நபர்கள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் 70 வயதிற்கு மேற்பட்டோர் உள்ளனர். நியாய விலை கடைகளை 725 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களில் உள்ள முதன்மை நியாய விலை கடைகளை தேர்வு ஒரு நியாய விலை கடைக்கு அதிகபட்சமாக 60 குடும்ப அட்டைகள் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் "முதலமைச்சரின் தாயுமானவர்" திட்டதின் கீழ் பயன்பெறும் 70 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கு நேரடியாக சென்று நியாய விலை கடை அலுவலர்கள் அவர்களின் முன்னிலையில் மின்னனு தராசின் மூலம் எடையிட்டு குடிமைப் பொருட்களை வழங்கி வருகிறார்கள்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த ஜெயப்பிரியா அவர்கள் தெரிவிக்கையில்:

நடக்கமுடியாமல் படுத்த நிலையில் இருக்கும் மாற்றுத்திறனாளியான எனக்கு எனது தந்தை தான் இதுநாள் வரை ரேஷன்கடைக்கு சென்று பொருட்களை வாங்கி வந்தார். தற்போது தாயுமானவர் திட்டம் அமலான பிறகு ரேஷன்கடை ஊழியர் வீட்டிற்கே வந்து பயோமெட்ரிக் இயந்திரத்தில் கைரேகை பதிவு செய்து அரிசி, பருப்பு, பாமாயில், சீனி உள்ளிட்ட பொருட் களை வழங்கி வருகிறார். முன்னர் ரேஷன் கடைகளில் அனைத்து பொருட்களையும் ஒரே நாளில் வாங்க முடியாது. வெவ்வேறு நாட்களுக்கு சென்று வாங்கும் நிலை இருந்தது. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் கருணையான நடவடிக்கையால் எங்கள் குடும்பத்திற்கு தேவையான ரேஷன்பொருட்கள் எங்க ளது வீடு தேடி வருகிறது. எங்களைப் போன்றவர்களை மட்டுமின்றி. மூத்த குடிமக்களின் நலனையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் இத்திட்டத்தில் சேர்த்தது, மூத்த குடிமக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதனால் எங்கள் சிரமம் குறைந்துள்ளது. ரேஷன் கடைக்கு அலைச்சல் இன்றி வீட்டில் இருந்தபடியே வயிறாற சாப்பிட முடிகிறது. எங்களை மதித்து இப்படிப் பட்ட உன்னதமான திட்டத்தை தந்த முதல்வருக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

**வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.**




# மாணவர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் 2,000 பேருக்கு டேட்டா சயின்ஸ் பயிற்சி: சென்னை ஐஐடி சிறப்பு திட்டம்

சென்னை, அக்.10-

சென்னை ஐஐடி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை ஐஐடி டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களுக்கு தீர்வு வழங்கும் வகையில் வெர்டிவ் என்ற பன்னாட்டு நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவின் எதிர்காலத்துக்கு ஏற்ப டிஜிட்டல் துறையை தயார்படுத்த முடிவுசெய்துள்ளது.

இதற்காக இத்துறையில் நிபுணர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில், சமூக பொறுப்பு நிதி (சிஎஸ்ஆர் ) தொடர்பான முன்முயற்சி நடவடிக்கையாக, 2 ஆயிரம் மாணவர்களுக்கு டேட்டா சயின்ஸ் செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு குறித்து 36 மணி நேர ஆன்லைன் பயிற்சி அளிக்கப்படும். முதல்கட்டமாக, 160 பேர் தேர்வுசெய்யப்பட்டு அவர்களுக்கு ஐஐடி வளாகத்தில் 5 நாள் ஆன்லைன் பயிற்சி வழங்கப்படும்.

இந்தியாவின் வளர்ந்துவரும் டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு ஏற்ற அறிவை வளர்த்துக்கொள்ளும் வகையில் இதற்கான பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி டிஜிட்டல் துறையில் மாணவர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்க பெரிதும் உதவும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில்

# 17.10.2025 அன்று சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தகவல்




தென்காசி, அக்.10-

தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கதவு எண்.168, முகமதியா நகர் (எபினேசர் டைல்ஸ் அருகில் . ரிதிசி. பின்புறம்), குத்துக்கல் வலசை, இலத்தூர் அஞ்சல் என்ற முகவரியில் முதல் செயல்பட்டு வருகிறது.

தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில், அக்டோபர் மாதத்திற்கான சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற 17.10. 2025 அன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை அலுவலக வளாகத்தில் நடைபெற இருக்கிறது.

இம்முகாமில் 20 க்கும் மேற்பட்ட பல்வேறு தனியார்துறை முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர். இம்முகாமில் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி, 10ம் வகுப்பு தேர்ச்சி, 12ம் வகுப்பு தேர்ச்சி, பட்டப்படிப்பு, ஐ.டி.ஐ மற்றும் டிப்ளமோ ஆகிய கல்வித் தகுதி உடைய தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த வேலைநாடுநர்கள் கலந்து கொள்ளலாம்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விரும்பும்

வேலைநாடுநர்கள் www.tnprivatejobs.tn.gov.in என்ற வலைதளத்தில் Candidate Login – ல் தங்களது சுய விபரங்களை பதிவு செய்ய வேண்டும்

இம்முகாமில் கலந்து கொள்ள விரும்பும் தனியார் துறை நிறுவனங்கள் www.tnprivatejobs.tn.gov.in என்ற வலைதளத்தில் Employer Login ல் நிறுவனம் தொடர்பான விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு 04633 213179 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மேலும் TENKASI EMPLOYMENT OFFICE என்ற Telegram Channel ல் இணைந்தும் வேலைவாய்ப்பு முகாம் தொடர்பான விபரங்களை அறிந்து கொள்ளலாம்..

வேலைவாய்ப்பு முகாம் மூலம் பணிநியமனம் பெற்றவர்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு எவ்விதத்திலும் பாதிக்கப்படாது. இவ்வேலைவாய்ப்பு முகாமில்

தென்காசி மாவட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு



கன்னியாகுமரி, அக்.10-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கடந்த 15.07.2025 அன்று துவக்கி வைத்ததைத்தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்டம் நாகர் கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார் எம்.டி.பி சமூக நலக் கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற அற்புதமான திட்டம் அக்டோபர் மாதம் 15ம் தேதி வரை நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்று நாகர்கோவில் மாநகராட்சி 39வது வார்டுக்குட்பட்ட பகுதி பொதுமக்களுக்கு கோட்டார் எம்.டி.பி சமூக நலக் கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டது. மேலும் மருத்துவ முகாம் நடைபெறும் அரங்கினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 15.07.2025 முதல் 08.10.2025 வரை 270 முகாம்கள் நடத்தப்பட்டு 1,35,041 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. முகாமில் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு உடனடியாக சொத்துவரி பெயர்மாற்றம், பிறப்பு சான்றிதழ், மின் கட்டண பெயர்மாற்றம், புதிய மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு, வருமான சான்றிதழ், சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், தொழிலாளர் நல வாரிய அட்டைகள், குடும்ப அட்டைகளில் பெயர்மாற்றம்முகவரி மாற்றம், ஆதார் அட்டைகளில் பெயர்மாற்றம், கடனுதவிகள், பட்டா பெயர் மாற்றம் உள்ளிட்ட 9277 மனுக்களுக்கு தீர்வுகள் மற்றும் அதற்கான ஆணைகள் வழங்கப் பட்டுள்ளது. தொடர்ந்து முகாமிற்கு வருகை தரும் பொதுமக் களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுத்திடவும், பெறப்படும் மனுக்களை இணையத்தில் உடனடியாக பதிவேற்றம் செய்யவும் முகாம் ஒருங்கிணைப்பாளர்க்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பொதுமக்கள் உங்கள் வீட்டின் அருகில் நடைபெறும் முகாம்களுக்கு சென்று மனுவினை அளித்து தங்களின் தேவைகளுக்கு தீர்வு காண உங்களுடன் ஸ்டாலின் முகாமினை பயன்படுத்தி கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா, நாகர்கோவில் மாநகர் நகர்நல அலுவலர் மரு.ஆல்பர் மதியரசு, மண்டலதலைவர் திருமதி.கோகிலா வாணி, துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



## மதுரை போத்தம்பட்டி பகுதியில் உசிலம்பட்டி செல்லம்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டம்

மதுரை, அக்.10-

மதுரை உசிலம்பட்டி தாலுகா உசிலம்பட்டி செல்லம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் போத்தம்பட்டி பகுதியில் தொடர் வேலை நிறுத்த போராட்ட த்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் கௌரவ தலைவர் ராஜா மாவட்ட இணைச்செயலாளர்கள்

மகேந்திரன், நீதி முத்தையா ஒன்றிய செயலாளர்கள் ஜெயம், ரமேஷ் அன்பழகன், கயல்விழி, விஜயகுமார் முருகன்,உக்கிரபாண்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை களை வலியுறுத்தி, மாநில தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கத்தினர், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் வேலை நிறுத்தப்போராட்டத்தை நடத்தினர்.கோரிக்கைகளை அரசு ஏற்கும் வரை வேலை நிறுத்த போராட்டம் தொடரும் என சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். கூட்டுறவு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி குறைப்பை ரத்து செய்ய வேண்டும். ஊழியர்களுக்கு, 20 சதவீதம் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும். ரேஷன் கடைகளில், புளூடுத் இணைப்பு ஏற்படுத்தி, எடை போடும் பணியை கைவிட வேண்டும் என்பது உள்ளிட்ட, 25 கோரிக்கைகளை வலியுறுத்தி, போராட்டம் நடத்தி வருகிறோம். கோரிக்கைகளை அரசு ஏற்கும் வரை வேலை நிறுத்த போராட்டம் தொடரும்.

.கூட்டுறவு சங்கங்களை வகைப்பாடு செய்யாமல், அனைத்து சங்க பணியாளர்களுக்கும் 2023 மார்ச் மாதம் பெற்ற சம்பளத்தில் இருந்து 20 சதவீதம் உயர்வு வழங்க வேண்டும். ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு விரைவில் நிதிப்பயன் வழங்க வேண்டும். ஆயிரம் ரூபாய் பென்ஷனை 5,000 ஆக உயர்த்த வேண்டும். சங்கங்களுக்கு அரசு தர வேண்டிய, ஏழு சதவீத வட்டி பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் உள்ளதை உடனே வழங்க வேண்டும். பதவி உயர்வில் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் வகையில், மாவட்ட அளவில் பணி மூப்பு பட்டியல் தயார் செய்து, பதவி உயர்வு வழங்க வேண்டும். ரேஷன் கடை பணியாளர் களுக்கும் சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட, 25 அம்ச கோரிக்கைகளை பலமுறை வலியுறுத்தியும், அரசு கண்டுகொள்ளவில்லை. என தெரிவித்தனர்.

## கடையநல்லூர் நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் 22 வார்டுகளில் நிறைவு பெற்றது நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபிபுர் ரஹ்மான் பெருமிதம்

தென்காசி, அக்.10-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சியில் மொத்தமுள்ள 33 வார்டுகளில் இதுவரை 8 முகாம்களில் 22 வார்டுகள் பயனடைந்துள்ளன தொடர்ந்து இன்னும் நான்கு முகாம்களில் 11 வார்டுகளுக்கான சேவைகள் வழங்கப்பட உள்ளது என கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் பெருமையுடன் தெரிவித்தார் இது குறித்து அவர் கூறியதாவது உங்களுடன் ஸ்டாலின்" திட்டம்

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டுக்காக "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறி வித்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நகர்ப்புறப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 13 துறைகள் 43 சேவைகள்



ஊரகப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 15 துறைகள் 46 சேவைகள்

மக்கள் எளிதாக பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஜூலை 15 2025 முதல் நவம்பர் மாதம் 2025 வரை பத்தாயிரம் சிறப்பு முகாம்கள்

அரசு சேவைகளை பொதுமக்களுக்கு மிக விரைவாகவும் எளிதாகவும் வெளிப்படைத்தன் மையுடனும் கொண்டு சேர்ப்பதற்காக

"உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்கள் தமிழகத்தின்

அனைத்து பகுதிகளிலும் நடைபெறவுள்ளது.

"சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதிவாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய" போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்க உள்ளனர்.

"உங்களுடன் ஸ்டாலின்"

திட்ட முகாம்களில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்! கடையநல்லூர் நகராட்சியில் ஜூலை மாதம் 18 மற்றும் 31 ஆம் தேதிகளில் பேட்டை ஜலாலியா மதராஸாவில் வைத்து வார்டு எண்: 11.13.18.19. மற்றும் 20 தொடர்ந்து கிருஷ்ணாபுரம் சீதாலட்சுமி திருமண மண்டபத்தில் வைத்து ஆகஸ்ட் 12 மற்றும் 26 ஆம் தேதிகளில் வார்டு எண் 1 2 3 மற்றும் 5 6 ஆகிய பகுதிகளுக்கும் செப்டம்பர் 10ஆம் தேதி அன்று வார்டு எண் 29 30 31 மற்றும் 32 ஆகிய பகுதிகளுக்கு மேல கடையநல்லூர் இன்டர்நேஷனல் பள்ளியில் வைத்தும் செப்டம்பர் 17 அன்று வார்டு எண் 4 14 மற்றும் 15 செப்டம்பர் 25 அன்று வார்டு எண் 21 22 மற்றும் 23 நேற்று வார்டு என் 16 மற்றும் 17 நடைபெற்றது மேலும்நாளை வார்டு எண் 24 25 மற்றும் 33 ஆகியவற்றிற்கு முத்து கிருஷ்ணாபுரம் சேனைத்தலைவர் திருமண மண்டபத்தில் வைத்தும் சிறப்பு முகாம்கள் தொடர்ந்து அக்டோபர் 14ஆம் தேதி வார்டுஎண் 7 8 மற்றும் 9 அக்டோபர் 16ஆம் தேதி வார்டு எண் 10 மற்றும் 12 ஆகியவற்றிற்கு தென்காசி மதுரை சாலையில் அமைந்துள்ள மறவர் மண்டபத்திலும் அக்டோபர் 23ஆம் தேதி 26 27 மற்றும் 28 வார்டு பகுதிகளுக்கு மேல க்கடையநல்லூர் சேனைத்தலைவர் திருமண மண்டபத்தில் வைத்தும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது இதுவரை 22 வார்டுகளுக்கு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது இதுபோன்று 11 வார்டுகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி மேற்பார்வையில் 13 துறைகளைச் சார்ந்த அதிகாரிகளின் கண்காணிப்பில் பொதுமக் களுக்கு வழங்கப்படும் சேவைகளை பெற்றுக் கொள்ளலாம் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் தாயுமானவரின் ஆட்சி தொடர 234 தொகுதி லட்சியம் 200 தொகுதி நிச்சயம் என்ற தாரக மந்திரத்தோடு எங்களது களப்பணி தொடர்ந்து மக்களோடு செல் மக்களுக்காக செல் என்பதில் உறுதியாக உள்ளோம் என தெரி வித்தார் நேற்று முன்தினம் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் கடையநல்லூர் நகரக் கழக திமுக செயலாளர் அப்பாஸ் 16 மற்றும் 17 வார்டு கழக செயலாளர் இளைஞர் அணி அமைப்பாளர் யாசின் மற்றும் கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலக சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் மைதீன் பட்டாணி கடையநல்லூர் நகராட்சி பொறியாளர் மைதீன் அப்துல் காதர் வருவாய் ஆய்வாளர் ராஜசேகர் சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கர் சுகாதார ஆய்வா ளர்கள் சிவா மற்றும் மாதவராஜ் குமார் கணக்கர் புஷ்பநாதன் காவல்துறை உதவி ஆய்வாளர் சம்சுதீன் வருவாய்த்துறை பிர்கா ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் உதவியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அரசு பஸ்ஸில் தினமும் அட்ராசிட்டி செய்யும் கல்லூரி மாணவர்கள்

சிவகங்கை, அக்10-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்திலிருந்து 16ம் எண் கொண்ட சிவகங்கை க்கு டவுன் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது அதில் மாணவர்கள் அதிகம் பேர் படியில் தொங்கிக்கொண்டு சென்றனர் இதனை கவனித்த ஓட்டுநர் அரசு பேருந்து விட்டு கீழே இறங்கி படியில் நின்ற மாணவர்களிடம் போய் உள்ளே செல்லவும் என்று கூறினார் மேலும் கதவுகளை அடைக்க முடியவில்லை என்றும் அதனால் உள்ளே போக சொன்னார் ஆனால் மாணவர்கள் அவர் சொல்வதை எதையுமே பொறுப்பெடுத்தாமல் மீண்டும் படியிலே தொங்கி சென்றனர் அரசு பஸ் டிரைவரோ புலம்பி சென்றார். படியில் பயணம் நொடியில் மரணம் என்பதை மறந்து படிக்கட்டில் தொங்குவதை சாகசம் என்று ஓட்டுநர் இடம் வாக்குவாதத்தில் ஈடுபடுவதாக ஓட்டுநர்கள் வேதனை




தெரிவித்துள்ளனர். வாழ்வில் படித்து முன்னேறி பணியில் சேர்வது சாகசமா ! அல்லது பயணத்தின் போது படியில் தொங்கிக்கொண்டு செல்வது சாகசமா ! என்பதை மாணவர்கள் உணர்ந்து இது போன்ற தவறுகளில் ஈடுபட வேண்டாம் என்று போக்குவரத்து துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏதேனும் அசம்பாவிதம் நடைபெறாமல் இருப்பது மாணவர்களின் கைகளில் உள்ளது.

## மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது

இராமநாதபுரம், அக்.10-

13.10.2025 அன்று காலை 10:00 மணி முதல் மாலை 05:00 மணி வரை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் மேற்பார்வையில் பிரதம மந்திரி தேசிய தொழிற்பழகுநர் (PÝN»Ý) பயிற்சிக்குரிய தேர்வு முகாம் 2025 நடைபெறவுள்ளது. இதில் ஐந்திற்கும் மேற்பட்ட அரசு நிறுவனங்கள் (தமிழ்நாடு அரசு போக்கு வரத்துக்கழகம், தமிழ்நாடு அரசு மின்சார வாரியம், வழுதூர் இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிறுவனம், தமிழ்நாடு அரசு உப்பு உற்பத்தி கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு பனிமனை) மற்றும் ஐம்பதிற்கும் மேற்பட்ட முன்னனி தனியார் நிறுவனங்கள் இம்முகாமில் நேரடியாக பயிற்சியாளர்களை தொழிற்பழகுநர் பயிற்சிக்கு தேர்வு செய்யவுள்ளதால் இதில் ஐவுஜயில் மற்றும் ளுஊஏவு பயிற்சி முடித்த வர்கள் நேரடியாக கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## பிரதம மந்திரி தேசிய தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம் 13.10.2025 அன்று நடைபெற உள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்

கடலூர், அக்.10-

தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் தொழிற்பழகுநராக சேர்க்கை செய்திட மாவட்ட அளவிலான தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம் 2025 கடலூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் உள்ள மாவட்டத் திறன் பயிற்சி அலுவலகத்தில் வருகின்ற 13.10.2025 அன்று திங்கள்கிழமை காலை 09.00 மணி முதல் நடைபெற உள்ளது.

இம்முகாமில் கடலூர் மாவட்டத்தில் உள்ள 20 க்கும் மேற்பட்ட அரசு மற்றும் முன்னனி தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு 300க்கும் மேற்பட்ட தொழிற்பழகுநர் இடங்களை நிரப்ப உள்ளனர். இப்பயிற்சிக்கு தகுதிக்கேற்ப மாதாந்திர உதவித்தொகையாக ரூ.6500/ முதல் 12,300/ வரை நிறுவனத்தால் வழங்கப்படும்.

எனவே, தொழிற்பயிற்சி முடித்து தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவிகள் மேற்படி முகாமில் கலந்து கொண்டு இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் இம்முகாமில் கலந்துகொண்டு பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் தொடர்புக்கு உதவி இயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகம், கடலூர் என்ற முகவரி மற்றும் 9499055861, 9994396444 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.






## 554 கோடி மதிப்பில் தரமாக உருவாகும் மதுரைகொல்லம் பசுமை நெடுஞ்சாலை: 2025 டிசம்பரில் பணி முடிவு எதிர்பார்ப்பு

### தடைகளைத் தாண்டி வெற்றிக்குப் பாதை வகுக்கும் ஏ.எல்.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ்

மதுரை, அக்.10-

தமிழகம் கேரளா வர்த்தக நரம்பாக விளங்கும் மதுரைகொல்லம் பசுமை நெடுஞ்சாலை திட்டம் (ழிபி 744) வேகமாக முன்னேறி வருகிறது. இதில் முக்கியப் பகுதி ஒன்றாகக் கருதப்படும் திருமங்கலம் முதல் வடுகபட்டி வரை உள்ள 36 கி.மீ நான்கு வழிச் சாலை பணிகள், ரூ.554 கோடி செலவில் 2025 டிசம்பரில் முடிவடையும் என அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

இந்த பசுமை நெடுஞ்சாலை திட்டம், 2023 மார்ச் மாதம் தொடங்கப்பட்டது. முதலில் 2025 பிப்ரவரி இறுதிக்குள் திட்டத்தை முடிக்க திட்டமிடப்பட்டது. ஆனால் நிலம் கையகப்படுத்தல் சிக்கல்கள் மற்றும் உள்ளூர் மக்கள் எதிர்ப்பு காரணமாக திட்டம் சில மாதங்கள் தாமதமடைந்தது.

திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

தொலைவு: திருமங் கலம் - வடுகபட்டி (36 கி.மீ.)

மொத்த செலவு: 554 கோடி

முக்கிய இடங்கள்: டி.புதுப்பட்டி பைபாஸ் ரூ கல்லுபட்டி ரூ குணத்தூர் வழியாக வடுகபட்டி

சிறப்பு பணிகள்:

16 வாகன அடித்தாழ்வுப் பாதைகள்

2 பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதைகள்

விபத்து வாய்ப்பு உள்ள பகுதிகளில் பாதுகாப்பு அம்சங்கள்

வர்த்தக மற்றும் பயண நன்மைகள்:

மொத்தமாக 260 கி.மீ நீளமுடைய ழிபி 744, தமிழகம், கேரளா, இலங்கை இடையிலான பொதுவான வர்த்தக நெடுஞ்சாலையாக செயல்பட உள்ளது. இதன் மூலம்:

மதுரை திருவனந்தபுரம் இடையிலான பயண நேரம் 2 மணி நேரம் வரை குறையும்

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி போன்ற மாவட்டங்களுக்கு வர்த்தக ரீதியாக கொல்லம் செல்லும் சாலையாக பயன்படும்

சரக்கு போக்குவரத்து வேகமாகவும் பாதுகாப்பாகவும் நடைபெறும்

ஏ.எல்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் - இடையூறுகளை மீறிய முன்னேற்றம்:

இந்தத் திட்டத்தின் முக்கிய கட்டமாக உள்ள திருமங்கலம் - வடுகபட்டி சாலை பணிகள் மேற்கொள்வது, ஏ.எல்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற ஒப்பந்த நிறுவனம். பல்வேறு சிக்கல்கள் மற்றும் தடைகள் இருந்தபோதிலும், தொழிலாளர்கள் இரவும் பகலும் தொடர்ந்து பணியில் ஈடுபட்டு, தரமான சாலை அமைப்பை நிதானமாக நிறைவேற்றியுள்ளனர்.

எதிர்பார்க்கப்படும் தாக்கங்கள்:

இந்த பசுமை நெடுஞ் சாலை தென் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னணி தூணாக அமையும் என நிபுணர்கள் கருதுகிறார்கள். அறிந்தோ அறியாமலோ தடையாக இருந்த சாலைகள், இப்போது வணிக வளர்ச்சியின் பாதையாக மாறும் வாய்ப்பு உள்ளது.

## ஸ்ரீராம் இலக்கியக் கழகம் நடத்திய மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் கோவை மண்டல மாணவர் சாதனை

கோவை, அக்.10-

இந்தியாவில் சீட்டு நிதி வர்த்தகத்தில் முன்னணி இடத்தை வகித்து வரும் ஸ்ரீராம் குழும நிறுவனங்களில் ஒரு அங்கமாகிய ஸ்ரீராம் இலக்கியக் கழகம், தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக நடத்திய திருக்குறள் பேச்சுப் போட்டி இறுதிச் சுற்றில், மூலத்துறை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர் பி. ஸ்ரீதேவ் இடைநிலைப் பிரிவில் மூன்றாம் பரிசை வென்று சாதனை படைத்துள்ளார்.

ஸ்ரீராம் இலக்கியக் கழகம், 'இடைநிலைப் பிரிவு (68 ஆம் வகுப்பு)', 'மேல்நிலைப் பிரிவு (9 12 வகுப்பு)', 'கல்லூரிப் பிரிவு' என மூன்று பிரிவுகளில் திருக்குறள் பேச்சுப் போட்டியை 1988ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் மாநில அளவில் நடத்தி வருகிறது. இதில் நடப்பாண்டில் மொத்தம் 6049 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, வேலூர், தாம்பரம், புதுச்சேரி, சேலம், திருச்சி, நெல்லை, மதுரை, தஞ்சாவூர், திருவாரூர், கோவை மற்றும் ஈரோடு ஆகிய 12 மண்டலங்களில் கால் இறுதி மற்றும் அரை இறுதிச் சுற்றுகள் கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்றன. இவற்றிற்கான இறுதிச் சுற்று அண்மையில் சென்னையில் நடைபெற்றது. அரை இறுதிச் சுற்றில் வெற்றி பெற்ற 36 போட்டியாளர்கள் (இடைநிலை, மேல்நிலை, கல்லூரி என ஒவ்வொரு பிரிவிலும் தலா ஒருவர் வீதம் 12 மண்டலங்களைச் சேர்ந்த வெற்றியாளர்கள்) இறுதிச் சுற்றில் பங்கேற்றனர்.

இதில் மாநில அளவில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோரின் விவரம்




வருமாறு:

இடைநிலைப் பிரிவு:

முதல் பரிசு: பா. வர்ஷா, ஷெம்ஃபோர்ட் ஃபியூச்ச ரிஸ்டிக் பள்ளி, சிதம்பரம், கடலூர் மாவட்டம்

இரண்டாம் பரிசு: த.தீ. தேவதீரன், ஸ்ரீ மகாதேவ குருஜி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, குடவாசல், திருவாரூர் மாவட்டம்

மூன்றாம் பரிசு: பி. ஸ்ரீதேவ், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மூலத்துறை, மேட்டுப்பாளையம், கோவை மாவட்டம்

மேல்நிலைப் பிரிவு:

முதல் பரிசு: பெ.த. சங்கமேஸ்வரன், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சங்ககிரி, சேலம் மாவட்டம்

இரண்டாம் பரிசு: தி. தீஷா, அரசு மாதிரிப் பள்ளி, கைக்குறிச்சி, புதுக்கோட்டை மாவட்டம்

மூன்றாம் பரிசு: ந. நந்தினி, அரசினர் மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

கல்லூரிப் பிரிவு:

முதல் பரிசு: பு. சுசிமிதா. ஸ்ரீ சாரதா மகாவித்யாலயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்

இரண்டாம் பரிசு: மு. சந்தோஷ்குமார், கிருஷ்ணா கல்வியியல் கல்லூரி, கிருஷ்ணகிரி

மூன்றாம் பரிசு: மு. மணிவாசகம், ஜெ.ஜெ. கல்வியியல் கல்லூரி, சிவபுரம், புதுக்கோட்டை மாவட்டம்

முதல் பரிசு வென்றோருக்கு தலா ரூ. 15,000 ரொக்கமும், இரண்டாம் பரிசை தட்டிச் சென்றோருக்கு தலா ரூ. 10,000 ரொக்கமும், மூன்றாம் பரிசாக தலா ரூ. 7,500 ரொக்கமும் மற்றும் அனைவருக்கும் கோப்பையும், சான்றிதழும் வழங்கப்பட்டன.



■ மதுரை மாவட்டம், ஸ்ரீ மீனாட்சி அரசினர் கலைக் கல்லூரியில், உயர்கல்வித் துறை சார்பில் நடத்தப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான கலைத்திருவிழாப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பாராட்டுச் சான்றிதழினை வழங்கினார்கள்.கல்லூரி கல்வி இயக்கக ஆணையர் எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் கல்லூரி கல்வி இணை இயக்குனர் பொன் முத்துராமலிங்கம் ஆகியோர் உடன் உள்ளனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161